நாள் 27.06.2025 STC 313/2021 அ.சா. 3

பெயர் சண்முக வேலுச்சாமி

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

(எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 311 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் கு.வி)

(1) 4 மணியளவில் டிப்பர் லாரியை குப்பைக் கொட்டிக்கொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான். மருத்துவ கழிவுகளை கொட்டிக்கொண்டு இருந்தார்கள். அதை 5 மணியளவில் அள்கிக்கொண்டு சென்றார்கள் என்றால் அள்ளிக்கொண்டு சென்றது பற்றி எனக்கு தெரியாது. நான் கொடப்பட்டதாக சொல்லும் கழிவை பார்க்கவில்லை என்றால் சரியல்ல பார்த்தேன். போலீஸ் விசாரணையில் மருத்துவ கழிவுகளை கொட்டிக்கொண்டு இருந்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. டிப்பர் லாரி முன் பகுதியில் என்ன பெயர் எழுதி இருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீஸ் விசாரணையில் கெட்ட வாடை வீசியதாக நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல நான் சொன்னேன். நானும், தலைவரும் மடத்துக்குளம் காவல் நிலையம் வந்தோமா என்றால் நான் காவல் நிலையம் வரவில்லை. தலைவருக்கு தகவல் சொன்னேன் அவர் காவல் நியைலம் சென்றார். போலீசார் என்னை அதே தேதியில் விசாரித்தார்களா என்றால் இல்லை மறு நாள் விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் சம்பவ இடத்திற்கு வந்த போது கழிவுகள் இல்லை என்றால் அதை நான் பார்க்கவில்லை.

(2) எந்த கழிவும் கொட்டப்படவில்லை என்றும் அந்த இடத்தில் கழிவுகள் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் கழிவுகள் கொட்டப்பட்டிருந்தால் போலீசிடம் நான் அதை காட்டி இருப்பேன் என்றும் கழிவுகள் கொட்டப்படவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் ஓட்டுநர் நவாப் போன் செய்து வரச்சொன்னதாக சொல்லியுள்ள தகவல் போலீஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். உடுமலைப்பேட்டை நகராட்சியில் குப்பைகளை உரமாக மாற்றி விற்பனை செய்கிறார்கள் என்றால் சரிதான். முன் பதிவு அடிப்படையில் உரம் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. வேறு நபருக்கு விற்பனை செய்துவிட்டு வண்டி வரும் போது

நான் எங்கள் ஊரைச் சேர்ந்த சகாதேவன் இருவரும் எங்களுக்கும் உரம் கொடுக்குமாறு கேட்டு 1ம் எதிரி முன் பதிவு இல்லாமல் கொடுக்க முடியாது என்று சொன்னதால் எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு நான் எங்கள் ஊர் தலைவரிடம் பெய்யான தகவல் சொல்லி பொய் புகார் கொடுக்க காரணமாக இருந்தேன் என்றால் சரியல்ல. உண்மையில் கழிவுகள் கொட்டப்பட்டிருந்தால் பாறைக்குழியில் கழிவுகள் இருந்திருக்கும் என்றும் அவ்வாறு கழிவுகள் கொட்டப்படவில்லை என்றும் நானும் சகாதேவனும் சொன்னது போல் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும் நான் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. பொய் புகார் கொடுக்க ஊர்க்காரர்கள் கலந்து ஆலோசித்து கொடுத்ததால் காலதாமதம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-Thiru.M.Dheenadhayalan, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்